# அகத்தியர் கூறும் அறிவியல் சிந்தனைகள்

## தமிழர் மருத்துவச் சிறப்பும் அறிவியலில் பொருளாதார மீட்சியும்.

உலகில் சித்த மருத்துவமும் தமிழ், தமிழர் மருத்துவமும் ஒன்றே!நம் மருத்துவம் பிறந்த காலத்தை அறிந்து கூற இயலாது.கூறவேண்டுமானால் தமிழகத்து மண்ணில் செடி கொடிகள் தோன்றிய காலமே தமிழர் மருத்துவம் தோன்றிய காலம் என்று துணிந்து கூறலாம்.

**மொழி**

நாட்டு வைத்தியம் என்று பொதுவாகக் குறிப்பிடப்படுவது மூன்றாகும். ஒன்று சித்த மருத்துவம்; இரண்டு ஆயுர்வேதம்; மூன்று யூனானி, தமிழர் மருத்துவத்திற்கு மொழி தமிழ்; ஆயுர்வேதத்திற்கு மொழி வடமொழி; யூனானிக்கு மொழி உருது. யூனானிக்குத் திசைமேற்கு; ஆயுர்வேதத்திற்குத் திசை வடக்கு; சித்த வைத்தியத் திற்கு திசை தெற்கு.

**தமிழர் மருந்துகள்**

தமிழர் மருந்துகள் பெரும்பாலும் பொடியும் கியாழமுமாக இருக்கும். இதனை பசுபம் (பஸ்பம்) என்றும் கசாயம் என்றும் சொல்வர். ஆயுர்வேத வைத்தியம் பெரும்பாலும் தைலமும்,திராவகமுமாக இருக்கும். யூனானி மருந்துகள் பெரும்பாலும் அல்வாவும் லேகியமாக இருக்கும்.

**தமிழிரின் சிறப்பு - பசுபம்( பஸ்பம்)**

இது இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு முதவிய உலோகங்கள் ஒன்பது, முத்து, மணி, பவழம் முதலிய இரத்தினங்கள் ஒன்பது. வீரம், பூரம் முதலிய பாசாணங்கள் ஒன்பது. இதனை முறையே நவலோகம், நவஇரத்தினம், நவபாசாணம் என்பர். இந்த மூவொன்பது இருபத்தேழையும் பசுபமாக்கும் முறை சித்தவைத்தியத்தில் மட்டுமே உண்டு. பிற மருத்துவ முறைகளில் இவற்றில் சில பசுபமாகச் செய்யப்படும். எனினும், அதன் மூலம் சித்தவைத்திய முறையாகவே அமைந்திருக்கும்.

அலபதி முறையில் ஆங்கிலேயர்கள் இவற்றில் சிலவற்றை பசுமாக்குகிறார்கள். ஆனால், விலையுர்ந்த இயந்திரங்களில்,அதிகச் சம்பளம் வாங்குகிறவர்களின் கண் காணிப்பில், பெரும்பொருட் செலவில் அவை செய்யப் பெறுகின்றன. சித்த வைத்திய முறையிலோ இரண்டு மூன்று: 'வரட்டி' களைக் கொண்டு,மூலிகைகளின் சாறுகளைத் தடவி, எளிய முறையில், குறைந்த செலவில், சுருங்கிய நேரத்தில், இவை அனைத்தும் பசுபமாக்கப் பெற்று வருகின்றன.

**உன் உணவுதான் மருந்தாகிறது.**

தமிழர் தத்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமைந்திருப்பது வியப்புக்குரியது. காய் கறிகளெல்லாம் மருந்து,கீரை வகைகளெல்லாம் மருந்து, கடுகு, மிளகு, சீரகம், பூண்டு,மஞ்சள், சுக்கு, திப்பலி முதலிய கடைச் சரக்குகளெல்லாம் மருந்து, எள்ளு, கடலை, இலுப்பை, வேம்பு மூதலிய' எண்ணெய் வகைகளெல்லாம் மருந்து. சுருக்கமாகச் சொல்லப்போனால் பசுவின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் அனைத்துமே மருந்து. எனவே மருந்தாக அமைகின்ற இவையே சித்த வைத்திய முறையாகும். தமிழகத்தைத் தவிர பிற நாடுகளில் உணவுப் பொருள்களே மருந்தாக அமைகின்ற முறையைக் காண முடியாது. தமிழகத்துத் தட்ப, வெப்ப நிலைக்கு ஏற்ப, தமிழ் மக்களுக்குத்

தோன்றும் பிணிகளுக்குத் தமிழகத்து மண்ணில் முளைக்கின்ற செடி கொடிகளை மருந்தாகத் தருவதே தமிழ் மருத்துவ முறையாகும்.

**கை வைத்தியம்**

தாய்வழி மகள், காதுவழி கேட்டுக் கை வைத்தியமாகச் செய்யப்படுகின்ற ஒரு முறையும், தமிழகத்தில் உண்டு. இதையே சித்த வைத்தியம் என்றும், தமிழர் மருத்துவம் என்றும், வீட்டு வைத்தியம் என்றும், பாட்டிகள் தாத்தாகள் வைத்தியம் என்ரும் கூறுவதுண்டு. இந்தத் தலைமுறையில் நகரங்களில் வாழ்கின்ற படித்த பெண்கள் இம் முறைகளை அடியோடு கைவிட்டு விட்டனர். எனினும் சிற்றூர்களிலுள்ள எளிய குடும்பங்களில், இம்முறை இன்றும் இருந்து வருகிறது.

சித்த வைத்தியம், காலத்தால் முந்தியதும், விலையால் குறைந்ததும், கையாள்வதில் சிறந்ததும், பலனால் மிகுந்து,தகுதியால் உயர்ந்ததுமாகும். இவ்வித மருந்தும், மக்களின் உணர்ச்சிக் குறைவும், மருத்துவர்களின் முயற்சிக் குறைவும்,அரசினர் கவனக்குறையும் ஒன்று சேர்ந்ததினாலேயே இச்சித்தவைத்திய முறை அழியத் தொடங்கிவிட்டது.

**(டட தமிழரின் சற) சப்த மருந்துகள்.**

சித்த வைத்தியத்தில் ஒத்தை மருந்து என்றும் சில மருந்து உண்டு. அது பூண்டு ஒரு மருந்து. கடுகு ஒரு மருந்து. வெங்காயம் ஒரு மருந்து. தேங்காய் ஒரு மருந்து. அந்த ஒன்றையும் எதையும் சேர்க்காமல், அரைக்காமல், காய்ச்சாமல், நிறுக்காமல், உருக்காமல் அப்படியே கொடுக்கச் சிற்சில நோய்கள் தீரும். இதை வட மொழியினர் ' ஏக மூலிகைப் பிரயோகம் என்பர்.

**அவற்றுள் சில**

1. பாம்பு கடித்தால் வாழைப்பட்டையில் உள்ள சாற்றைப்

பிழிந்து கொடுக்க, உடனே குணமாகும்.

2. பூரான் கடித்தால் பனைவெல்லத்தையுண்டால் அதன்

தடிப்பு உடனே மாறும்.

3. பிறந்த குழந்தை தவறிப்போய் பெற்ற தாய்க்குப் பால்கட்டி

முலைக் குத்தல் ஏற்பட்டால், மல்லிகைப்பூ வைத்துக்கட்ட

உடனே குணமாகும். மல்லிகைப் பூ கிடைக்காத காலத்தில் வாழைப் பிஞ்சை அரைத்துத் தடவிக் குணங் காணலாம்.

4, நட்டுவாக்காலி கடித்தால், கொப்பரைத் தேங்காயை மென்று - தின்ன, உடனே குணங் காணலாம்.இந்த ஒத்தை மருந்தும் ஒரே வேளைதான். இரண்டாம் வேளை மருந்து தேவையே இல்லை. இம்மாதிரி முறைகள் “நூறு தமிழ் மருந்துகள்” என்ற நூலில் வெளியிடப் பெற்றிருக்கிறது. தமிழ்நாடு சித்த வைத்திய மண் மரபுளால் கொண்ட நாடு.

மருத்துவச்சிறப்பு சங்கத்தின் தலைவர், அமரர், டாக்டர் எஸ்.எஸ். ஆனந்தம் அவர்களால் பாராட்டப் பெற்றிருக்கிறது.உயர்ந்த அறுவை மருத்துவ முறைகள் சித்த வைத்திய முறையில் உண்டு. என்பதைக் கண்டு கூறியவரும் அவரே.

**அழிவு**

தமிழ் மருத்துவ முறை அழிவதற்குத் தமிழ் மருத்துவர்களும் ஒரு வகையில் காரணமாயினர். வறுமை வாய்ப்பட்ட மக்களிற் சிலர், தங்களை மருந்துவர் என்று சொல்லியும், தங்களிடமிருந்து மருந்து என்று கூறியும் தவறு செய்தமையால், பொதுமக்களின் நம்பிக்கை கெடத் தொடங்கியது. மருத்துவ நூல்களில் உள்ள கவிதைகளையும், அதில் மறைபொருளாகச் சொல்லப் பட்ட மருந்துகளின் பெயர்களையும் அறியாமலும் புரியாமலும் இளம் நவீன நவமருத்துவர்கள் சிலர் தவறு செய்யத் தொடங்கினர். இதனால் பொதுமக்கள் சிலர் சிறந்த .பண்டிதர்களையும், . உயர்ந்த மருத்துவர்களையும், அவர்களிடம் உள்ள தகுந்த மருந்துகளையும் சந்தேகிக்கத் தொடங்கினர். ஆனால் ஆங்கிலேயர்கள் சீனர்கள் இன்னும் பல நாடுகளில் ஆய்விட்டு, பதிவிட்டு, அறிவியல் கொண்டு பணம் பண்ண பழகி பல கோடிகளில் நம்மிடம் பறிக்கப்பழகி விட்டனர். நாமும நம் செடி கொடிகளை வேராக பச்சையா குறைந்த விலையில் விற்று அவர்கள் ஆயிரக்கண் கணக்கில் மிசின் வழி விற்று நம் வாயில் ரூபாயை போடுகிறார்கள். இவையும் சித்த வைத்திய முறையா? பொருளாதார அழிவுக்குக் காரணம்? மாநாட்டில் முடிவெடுப்பபோமாக?

**புதைந்து போனது**

சித்த வைத்திய முறையில் சிறந்து விளங்கிய மருத்துவமேதைகளும் பண்டித மணிகளும் பலர், தங்களிடமுள்ள உயாந்த முறைகளை வெளியே காட்டாமலும், பிறருக்குச் சொல்லாமலும், தமக்குப்பின் வாரிசாக ஒருவரைத் தேர்ந்தெடுத்துச்

சொல்லி மக்காமலும், அரசினருக்கு அறிவிக்காமலும், நூல்களாக எழுதி வைக்காமலும் மறைந்து போயின. மறைய மறைய, ஒவ்வொரு சித்த வைத்தியரையும் புதைக்கப் புதைக்க, சில சித்த வைத்திய முறைகளும் புதைக்கப்பெற்றே போயின.

**அழிந்த காரணம்**

இந்தத் தவறை நமக்கு முன்னே வாழ்ந்த பெரியோர்கள் செய்யவில்லை அவர்கள் தாங்கள் கண்ட அருமையான முறைகளை சுவடிகளில் எழுதிவைத்தனர். ஆனால் பாவம், அச்சுப் பொறிகளின் மையாலும், ஓலைகளிலேயே எழுதிக்-குவிக்கவேண்டி யிருந்தமையாலும், விரிந்த சொற்களில் உள்ளபரந்த முறைகளை, சொற்களைக் குறைத்துக் கவிதைகளாய் அமைத்துச் சுவடிகளாக்கி "வைத்துப் போயினர்.

தமிழ் மன்னர்களுடைய ஆட்சி அழிந்தமையினாலும், ஆங்கிலஆட்சியினரின் அக்கறைக் குறைவினாலும், காலத்தால் பாழ்பட்டும், கடற் கோள்களின் - அழிவிற்குள்ளாகியும்,கறையான்களால் தின்னப்பட்டும் அவற்றுள் பல சுவடிகள் அழிந்து போயின. இவை அனைத்திற்கும் தப்பிச் சில நூல்கள் மட்டுமே எஞ்சியிருந்தன. இவற்றையுங்கூட, “பழஞ்சுவடிகளை ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டால் புண்ணியம் என்று ஒரு கொள்கை பரப்பப் பட்டதினால் ஆரியர்களின் அந்தப்புண்ணியத்திற் ஆசைப்பட்டு மீதமிருந்த பழஞ்சுவடிகளையும் சிலர். ஆற்றில் அள்ளிப் போட்டுவிட்டு அமைதி அடைந்தனர்.

**அழிந்துபோன நூல்கள்**

இவ்வாறு அழிந்துபோன மருத்துவ நூல்கள் பல அவையாவன; அகத்தியர் பன்னிருகாண்டம் போகார். எண்ணாயிரம் கோரக்கர். மூலிகைப் பயன். ஆயிரம் கொங்கணவா-மூவாயிரத்து.நூறுகோரக்கர்.வெண்பா ஏழாயிரம்மச்சமுனி.ஏழு காண்டம்சி வவாக்கியம் - ஐந்து காண்டம். காசியா வண்ணம் உரோமமுனி வடுகம் இராமதேவர் சந்தப்பா நந்திசர்சந்தம்.சங்குமாமுனி. கலித்துறை |பதஞ்சலி-ஏழு காண்டம் சட்டமுனி நிகண்டு.சட்டமுன இரண்டாயிரத்து எழுநூறு –காலங்கி நாதர்நாலு காண்டம் போகர்-எழுநூறு முதவியன.- இரத்தக் கண்ணீர்

இவை அனைத்தும் தமிழகத்துச் சான்றோர்களாகிய சித்தர் பெருமக்களால் தமிழ் மொழியில் தோற்றுவிக்கப் பெற்றவை. இவையனைத்தும் அழிந்துபோயின என்பது சிற்சில பாடல்கள் கிடைத்திருப்பதாலும், சிற்சில. நூல்களில் மேற்கோளாக வந்திருப்பதாலும் அறிய முடிகிறது.

**மருதுவத்தில் தமிழின் சிறப்பு**

பெயரில் இருந்தனவோ? அவற்றுள் என்னென்ன புதையல்கள் இருந்தனவோ? அவற்றின் ஆசிரியர்கள் யார் யாரோ? அறியமுடியவில்லை அவை அனைத்தும்

இன்று இருந்தால்......? நினைத்தால் நெஞ்சம் புண்ணாகிறது. அழுதால் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீரே சொட்டுகிறது. என்ன செய்வது?

**முடிவு.**

சித்த வைத்தியத்திற்கு மலேசியாவில் ஓரு வாரியம் அமைய வேண்டும். இந்த நிலை மாறவேண்டும். மக்கள் சித்த வைத்தியத்தின் அருமை பெருமைகளை உணரவேண்டும். தாய்வழி மகள்:வாய்வழி கேட்டுக் கை வைத்தியமாகச் செய்யும் முறை தமிழகத்தின் மலரவேண்டும். மருத்துவத்திற்காகச் செலவழிக்கும் பெரும்பொருள் மிச்சப்பட வேண்டும். சிற்றூர்களிலெல்லாம் தமிழ் மருத்துவ ' மனைகள் - திறக்கப்பட வேண்டும்.

சித்தவைத்தியப் பள்ளிகளும், கல்லூரிகளும் தமிழகத்தில் பெரும்பான்மையாகத் திறக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, சித்த வைத்தியத்திற்கு - என ஓர் வாரியம் அமைய வேண்டும். இதுவே தமிழ மக்களின் விருப்பம். இதை இன்று நமது தமிழர் உறவுககள் முடிவாக முடிவெடுக்க வேண்டும். வெருமென அனைத்துலக மாநாடு என கூடிக்களையும் கூட்டமாக இருக்கக்கூடாது. நம்மின் கல்விக்குழுமங்கள் மீட்சிப்பெற வேண்டும்,

1 கருத்து அகத்தியர் (அகஸ்தியர்): தமிழ் இலக்கியம் மற்றும் சித்த மரபின் தந்தை

இந்தியாவின் புகழ்பெற்ற கலாச்சார மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தை பரப்புங்கள்

**அறிமுகம்**

அகஸ்தியர் என்றும் அழைக்கப்படும் அகத்தியர், இந்திய வரலாற்றின் வரலாற்றில் ஒரு மதிப்புமிக்க இடத்தைப் பிடித்துள்ளார், தமிழ் இலக்கியத்திலும் சித்த மரபிலும் ஒரு முக்கிய நபராகப் போற்றப்படுகிறார். அவரது பங்களிப்புகள் மருத்துவம், ரசவாதம், யோகா மற்றும் ஆன்மீகம் உள்ளிட்ட பல்வேறு களங்களில் பரவி, அவரை ஞானம் மற்றும் அறிவின் முன்னுதாரணமாக ஆக்குகின்றன. பெரும்பாலும் தமிழ் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படும் அகத்தியரின் மரபு, தலைமுறைகளை ஊக்குவித்து வழிநடத்தும் அவரது எண்ணற்ற படைப்புகள் மற்றும் போதனைகள் மூலம் அழியாததாக உள்ளது.

**ஆரம்பகால வாழ்க்கை மற்றும் புராணக்கதை**

அகத்தியரின் தோற்றம் புராணங்கள் மற்றும் புராணங்களில் மூழ்கியுள்ளது. பண்டைய நூல்களின்படி, தேவர்கள் (தெய்வங்கள்) செய்த யாகத்தின் (யாகச் சடங்கு) போது அவர் ஒரு புனிதமான பானையில் (கும்பம்) இருந்து பிறந்தார். இந்த அற்புதமான பிறப்பு அவருக்கு "கும்பஜா" அல்லது "கும்பமுனி" என்ற பெயரை வழங்கியது. அவர் ஏழு பெரிய முனிவர்கள் அல்லது சப்தரிஷிகளில் ஒருவராகவும் கருதப்படுகிறார், மேலும் பெரும்பாலும் ஆழ்ந்த ஆன்மீக நுண்ணறிவு கொண்ட ஒரு சிறிய உருவம் கொண்ட, துறவியாக சித்தரிக்கப்படுகிறார்.

## தமிழ் இலக்கியத்திற்கான பங்களிப்புகள்

### 1. அகத்தியம்: முதல் தமிழ் இலக்கணம்

தமிழ் இலக்கணம் குறித்த ஆரம்பகால படைப்பான "அகத்தியம்" இயற்றிய பெருமை அகத்தியருக்கு உண்டு. இந்த நினைவுச்சின்ன உரை தமிழ் மொழிக்கு அடித்தளம் அமைத்து, அதன் தொடரியல், ஒலிப்பு மற்றும் உருவ அமைப்பை நிறுவியது. அசல் "அகத்தியம்" தொலைந்துவிட்டதாக நம்பப்பட்டாலும், அதன் செல்வாக்கு அடுத்தடுத்த இலக்கணப் படைப்புகள் மற்றும் தமிழ் மொழியின் கட்டமைக்கப்பட்ட அழகு மூலம் ஊடுருவுகிறது.

### 2. கவிதை மற்றும் உரைநடை

தமிழ் இலக்கியத்திற்கு அகத்தியரின் பங்களிப்புகள் இலக்கணத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. தத்துவ, நெறிமுறை மற்றும் ஒழுக்கக் கருப்பொருள்களை ஆராயும் ஏராளமான கவிதைகள் மற்றும் உரைநடைகளை அவர் எழுதியுள்ளதாகவும் கூறப்படுகிறது. மனித இயல்பு மற்றும் பிரபஞ்சம் பற்றிய ஆழமான புரிதலை அவரது எழுத்துக்கள் பிரதிபலிக்கின்றன, பெரும்பாலும் கவிதை நேர்த்தியுடன் ஆழ்ந்த ஞானத்தை கலக்கின்றன.

## சித்த மரபின் முன்னோடி

### 1. சித்த மருத்துவம்

ஆயுர்வேதத்திற்கு முந்தைய குணப்படுத்தும் முறையான சித்த மருத்துவத்தின் ஸ்தாபக தந்தையாக அகத்தியர் புகழப்படுகிறார். மூலிகைகள், தாதுக்கள் மற்றும் அவற்றின் சிகிச்சை பண்புகள் பற்றிய அவரது விரிவான அறிவு முழுமையான ஆரோக்கியத்தை வலியுறுத்தும் ஒரு விரிவான மருத்துவ முறையில் உச்சத்தை அடைந்தது. மருத்துவம் குறித்த அகத்தியரின் நூல்கள் நோயறிதல், சிகிச்சை, ரசவாதம் (ரசவாதம்) மற்றும் அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கியது.

### 2. ரசவாதம் மற்றும் ரசவாதம்

அகத்தியரின் ரசவாதத்தில் நிபுணத்துவம் அல்லது "ரசவாதம்" புகழ்பெற்றது. அடிப்படை உலோகங்களை தங்கமாக மாற்றும் மற்றும் நீண்ட ஆயுள் மற்றும் அழியாமைக்கான சக்திவாய்ந்த அமுதங்களை உருவாக்கும் கலையில் அவர் தேர்ச்சி பெற்றதாக நம்பப்படுகிறது. அவரது ரசவாத நூல்கள் பல்வேறு செயல்முறைகளின் விரிவான விளக்கங்களை வழங்குகின்றன, இது மனித ஆன்மாவின் அறிவொளியை நோக்கிய மாற்றும் பயணத்தைக் குறிக்கிறது.

3. யோகா மற்றும் ஆன்மீகம்

ஆழ்ந்த யோகியான அகத்தியரின் யோகா மற்றும் ஆன்மீகம் பற்றிய போதனைகள் அவரது மரபின் முக்கிய பகுதியாகும். ஒழுக்கமான பயிற்சி, தியானம் மற்றும் தர்மத்தை (நீதி) கடைப்பிடிப்பதன் மூலம் உடல், மனம் மற்றும் ஆன்மாவை ஒருங்கிணைப்பதை அவர் வலியுறுத்தினார். அவரது யோக நூல்கள் ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் விடுதலையை (மோட்சம்) அடைவது பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகின்றன.

செல்வாக்கு மற்றும் மரபு

1. கலாச்சார தாக்கம்

அகத்தியரின் செல்வாக்கு இலக்கியம் மற்றும் மருத்துவத்திற்கு அப்பால் தென்னிந்தியாவின் கலாச்சார மற்றும் ஆன்மீக கட்டமைப்பில் நீண்டுள்ளது. அவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் தமிழ்நாடு முழுவதும் காணப்படுகின்றன, அவை தமிழ் பாரம்பரியம் மற்றும் ஆன்மீகத்திற்கு அவர் அளித்த பங்களிப்பைக் கொண்டாடுகின்றன. திருவிழாக்கள் மற்றும் சடங்குகள் அவரது நினைவைப் போற்றுகின்றன, அவர் மீது செலுத்தப்படும் ஆழ்ந்த மரியாதையை பிரதிபலிக்கின்றன.

2. நவீன பொருத்தம்

சமகாலத்தில், அகத்தியரின் போதனைகள் தொடர்ந்து பொருத்தமானவை. சித்த மருத்துவ முறை அதன் செயல்திறன் மற்றும் ஆரோக்கியத்திற்கான முழுமையான அணுகுமுறைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது உலகளவில் பயிற்சியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை ஈர்க்கிறது. யோகா மற்றும் ஆன்மீகம் குறித்த அவரது படைப்புகள் உள் அமைதி மற்றும் சுய உணர்தலை நாடுபவர்களை ஊக்குவிக்கின்றன.

3. கல்வி ஆய்வு

அகத்தியரின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்க கல்வி ஆர்வத்தை ஈர்த்துள்ளன, பண்டைய தமிழ் கலாச்சாரம், மருத்துவம் மற்றும் ஆன்மீக நடைமுறைகள் பற்றிய நுண்ணறிவுகளை வெளிப்படுத்த அறிஞர்கள் அவரது நூல்களை ஆராய்கின்றனர். ஆன்மீக ஞானத்துடன் அறிவியல் அறிவை ஒருங்கிணைப்பது வரலாற்றாசிரியர்கள், மொழியியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு ஒரு வளமான ஆய்வுத் துறையை வழங்குகிறது.

முடிவுரை

முனிவர் அகத்தியரின் மரபு, தமிழ் இலக்கியம் மற்றும் சித்த மரபிற்கு அவர் ஆற்றிய இணையற்ற பங்களிப்புகளுக்கு ஒரு சான்றாகும். இலக்கணம், மருத்துவம், ரசவாதம், யோகா மற்றும் ஆன்மீகம் குறித்த அவரது படைப்புகள் அறிவு மற்றும் ஞானத்தைத் தேடும் எண்ணற்ற நபர்களுக்கு பாதையை தொடர்ந்து ஒளிரச் செய்கின்றன. அகத்தியரின் காலத்தால் அழியாத ஞானமும் தமிழ் கலாச்சாரத்திலும் அதற்கு அப்பாலும் அவரது மதிப்பிற்குரிய அந்தஸ்தும் இந்தியாவின் சிறந்த முனிவர்களில் ஒருவராக அவர் மதிக்கப்படும் அந்தஸ்தை உறுதிப்படுத்துகிறது. ஆழ்ந்த ஆன்மீக நுண்ணறிவு மற்றும் நடைமுறை அறிவு ஆகியவற்றால் நிறைந்த அவரது போதனைகள், முழுமையான நல்வாழ்வு மற்றும் சுய-உணர்தலுக்கான தேடலில் ஒரு வழிகாட்டும் ஒளியாகத் தொடர்கின்றன.